**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.301/2017**

Date: 19.03.2025

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1, A2 Present.**

**1வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை – PW–7– தீபா**

நான் திருமணம் முடிந்து நான் எனது பெற்றோர் வீட்டில் தான் குடியிருந்தேன். எனது அப்பா இறந்தபின்பு எனது கணவர் வீட்டிற்கு சென்றேன். போலிசார் விசாரணையில் நானும், எனது கணவரும் எனது பெற்றோர் வீட்டில் வசித்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது கணவர் அப்போது எந்த வேலைக்கும் செல்லவில்லை. எனது அப்பா காட்டில் வேலை செய்துகொண்டிருந்தார். தற்போது தான் கட்டிட வேலைக்கு செல்லுகிறார்.

எனது அப்பாவிற்கும் 1வது எதிரிக்கும் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு எதுவும் இல்லை. ஆனால் சொத்து தகராறு இருந்தது. எனது பாட்டிற்கு சொந்தமாக விவசாய நிலத்தில் சோளம் பயிர் செய்திருந்தார். எனது அப்பா வீட்டிற்கு அருகில் தான் பட்டரை வைத்திருந்தார். அது கத்தி மற்றும் கொடுவாள் செய்யும் பட்டரை. சம்பவதினத்தன்று எனது அப்பா பட்டரை போடவில்லை. காட்டில் விவசாயம் செய்துகொண்டிருந்தார். சம்பவத்திற்கு பின்பு எனது அப்பாவை ஊர்காரர்கள் மருத்துவமனைக்கு எடுத்துசென்றார்கள் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. எனது அப்பாவை 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு எடுத்துசென்றார்கள். ஆம்புலன்சை அழைத்தது ஊர்காரர்கள் தான்.

ஆம்புலன்ஸ் சுமார் 1மணி நேரம் கழித்து தான் வந்தது. ஆம்புலன்ஸ் வந்தபோது எனக்கு மயக்கம் தெளிந்துவிட்டடதா என்றால் இல்லை. மயக்கமாகத்தான் இருந்தேன். ஆம்புலன்ஸ் வந்தபோது ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள். எனது அப்பாவை எடுத்து சென்ற பின்பு தான் எனக்கு மயக்கம் தெளிந்தது. எனது அப்பாவின் பிரேதம் ஊரில் இருந்தபோது போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். போலிசார் அங்கு வைத்து என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

எனது கணவரையும், எனது அம்மாவையும் அங்கு வைத்து விசாரித்தார்கள். நாங்கள் சொன்னதை அங்கு வைத்து போலிசார் பேப்பரில் எழுதிக்கொண்டார்கள். அதன்பின் தான் நாங்கள் காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் சென்றேன். நான் காவல்நிலையத்தில் இருக்கும்போதே 1வது எதிரியை இரவு 8 மணிக்கு போலிசார் பிடித்து விட்டார்கள் என்று எனக்கு தெரியவந்தது. 1வது எதிரியை நான் காவல்நிலையத்தில் பார்க்கவில்லை.

எனக்கு தமிழ் படிக்க தெரியாது. 1வது எதிரி ராஜாங்கம் வீடு திட்டு எறி செல்லும்படி உயராமாக உள்ளது என்று சொன்னால் சரிதான். சுமார் 50 மேட்டில் 1வது எதிரி வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். சாதராண குரலில் பேசினால் அந்த வீட்டிலிருந்து கேட்காது என்று சொன்னால் சரியல்ல. கேட்கும். கைகலப்பு சம்பவம் எனது அப்பா எதிரி வீட்டிற்கு சென்ற பின்பு தான் நடைபெற்றது என்று சொன்னால் ஆமாம். துப்பாக்கி சுடு கேட்ட பின்பு தான் நான் அங்கு ஓடிபோய் பார்த்தேன். அதுவரைக்கும் நான் வீட்டில் இருந்தேனா என்றால் ஆமாம்.

1வது எதிரி வீட்டிலிருந்து பேசினால் எங்களது வீட்டிற்குள் கேட்குமா என்றால் சாதரணமாக பேசினால் கேட்காது. பொது இடத்தில் நின்று பேசினால் கேட்கும். எனது அப்பா வேலை செய்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்று என்னால் சரியாக சொல்லமுடியாது. ஆனால் எனது அப்பா கோவிலுக்கு அருகில் வேலை செய்துகொண்டிருந்தார். கோவிலுக்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 25 அடி இருக்குமா என்றால் அது எனக்கு தெரியாது. சம்பவதினத்தன்று கோவில் பூசாரி இருந்தாரா என்றால் இல்லை.

முதல்விசாரணையில் சொல்லியவாறு எதிரி அவரது வீட்டிற்குள் இருந்து சத்தம்போட்டிருந்தால் வீட்டிலிருந்த எனக்கு கேட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி எனது தகப்பானரை அழைத்ததாக நான் சொல்வது பொய் என்பதால் தான் முதல்விசாரணையில் ஒருமாதிரியும், தற்போது ஒருமாதிரியும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு காரணம் எனது அப்பா தான் என்று சொன்னால் சரியல்ல.

எனது அப்பாவின் உடலில் இருந்த காயங்கள் அவர் மேலே இருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றும், நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளபடி ஏற்பட்டவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சத்தம் கேட்டு சென்றபோது எனது அப்பாவை கீழே தள்ளிவிட்டார்கள். 1வது எதிரி அங்கு நின்றுகொண்டு வந்தால் சுட்டு கொன்றுவிடுவேன் என்று சொன்னார். 1வது எதிரி மேலே நின்றுகொண்டிருந்தார் என்றும் எனது அப்பா கீழே உருண்டு வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அதே இடத்தில் தான் எனது அப்பாவும், 1வது எதிரியும் இருந்தார்கள்.

எனது முதல்விசாரணையில் துப்பாக்கியின் உடைந்த பாகங்களை எடுத்து அள்ளி சென்றுவிட்டதாக சொல்லியுள்ளேன். துப்பாக்கியின் எந்த பாகத்தை எதிரி எடுத்து சென்றார் என்றால் 1வது எதிரி அனைத்தையும் எடுத்து சென்றுவிட்டார். துப்பாக்கி முழுவதும் சுக்குசுக்காக உடைந்து 1வது எதிரி வீட்டில் கிடந்தது. துப்பாக்கி 4, 5 ஆக உடைந்துவிட்டது. அ தை 1வது எதிரி அள்ளி சென்றுவிட்டார். எனது அப்பா பட்டரையில் கள்ளதனமாக துப்பாக்கி செய்துகொடுக்கும் தொழில் செய்கிறார் என்றால் சரியல்ல. எனது அப்பா கத்தி மற்றும் களைகொத்தும் கத்தி மட்டும் தான் செய்வார்.

மிரட்டுவதற்காக எனது அப்பா தான் பட்டரையில் இருந்து துப்பாக்கியை எடுத்து சென்றார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள துப்பாக்கி எனது அப்பா பட்டரையில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவின் பிரேதத்தை நான் போய் தூக்கினேன். அப்போது தான் மயங்கிவிட்டேன். எனதுஅப்பாவிற்கு அருகில் நான் மயங்கி விழுந்துவிட்டேன். ஒருமணி நேரம் அங்கேயே மயங்கி கிடந்தேன்.

போலிசார் வந்து என்னை எழுப்பினார்கள் என்றால் ஆமாம். என்னை எழுப்பி கேட்டார்கள். என்னை ஆம்புலன்சில் அழைத்துசெல்லவில்லை. நான் அதே இடத்தில் தான் கிடந்தேன். ரத்தகரை படிந்த எனது உடைகளை போலிசார் கேட்டு வாங்கினார்களா என்றால் இல்லை. வந்த போலிசார் அப்போதே 1வது எதிரிவீட்டிற்குள் சென்று என்ன இருந்தது என்று பார்த்தார்கள். 1வது எதிரியின் மனைவி சம்பவத்தின்போது வீட்டில் தான் இருந்தார். அதன் பின்பு 1வது எதிரியுடன் ஓடிவிட்டார்.

சம்பவ இடம் ஒருநாள் முழுவதும் போலிசார் கட்டுபாட்டில் இருந்தது. மோப்பநாய் இரவு வந்தது. போலிசார் மோப்ப நாயை அழைத்துகொண்டு எதிரி வீட்டிற்கு சென்றார்கள். இரவும் மற்றொரு போலிசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த சமயத்தில் சம்பவ இடத்தில் வசிக்கவில்லை என்றும், இரவு தான் அங்கு வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அப்பாவின் மரணத்தை பயன்படுத்தி சொத்திற்காக 1வது எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரம், விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் குடும்பத்தாருடன் கலந்து ஆலோசித்து பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவருக்கு வேலை இல்லாத காரணத்தினால் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,
III ADJ, Salem.